1987 நவம்பர் 11]

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவில் அமைக்கப்பட்ட குழுவே போதுமானது என்று சொன்னார்கள். மாவட்ட அளவில் ஒரு குழுவினை அமைப்பதால் அதிலே ஏதாவது சிரமம் ஏற்படுமா என்பது தெரியவில்லை. எனவே அந்த முயற்சியை மேற்கொண்டால் இன்னும் இந்த விழிப்புக் குழுவானது பணி புரிவதிலே மிகவும் அக்கறையோடு இருந்து செயல்படுவதன் காரணத்தைக் கொண்டும் இந்த மாவட்ட அளவிலான குழுவினை அமைப்பதற்கும், இந்த அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயங்களுக்கு மாத்திரம் இந்தக் குழு கட்டுப்பாடு கொண்டதா அல்லது தனியார் ஹெரிடேரி டிரஸ்ட்டி என்று சொல்லுகின்ற அந்த ஆலயங்களுக்கும் இந்த விழிப்புக் குழு பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள கோயில்களைப் பற்றித்தான் இந்தக் குழு அதிகாரம் செலுத்தும்.

ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு.

54—(*வினா எண் 12192) திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் சோழவந்தான் ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோவில் குடமுழுக்கு வேலை எப்போது துவங்கப்படும்?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தான் அருள்மிகு ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோயில் இராஜகோபுரம் மற்றும் விமானம் வர்ணம் பூசுதல் வேலைக்கு ரூ. 2,200-க்கு அனுமதி அளிக்கப்பட்டு, தற்போது திருத்திய மதிப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இத்திருக்கோயிலுக்கு அலங்கார மண்டபம் கட்டும் வேலைக்கு ரூ. 78,000-க்கு அனுமதி வழங்கப்பட்டு ரூ. 10,000

மதிப்புள்ள வேலைகள் துவங்கப்பட்டன. தற்போது இத்திருக் கோயிலில் போதிய நிதி வசதியின்மையால் வேலை பாதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அனைத்து வேலைகளும் முடிக்கப் பட்டவுடன் குடமுழுக்கு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள மத்திய அரசின் மின் திட்டங்கள்.

55—(*வினா எண் 12864) திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அமைந்துள்ள மத்திய அரசின் மின் திட்டங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் மொத்த உற்பத்தி எவ்வளவு?

(இ) அவற்றிலிருந்து மாநிலத்திற்கு கிடைக்கும் பங்கு என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே,

(அ) மூன்று.

(ஆ) 1280 மெகாவாட்.

(இ) 996.5 மெகாவாட்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவா அவர்களே, நெய்வேலியில் இரண்டாம் அனல் மின் நிலையத்தினுடைய முதல் பிரிவின் முழு உற்பத்தியையும் நம்முடைய தமிழ் மாநிலத்திற்கே கோரியது குறித்து மத்திய அரசின் பதில் என்ன? அவற்றை உறுதியாக கோரி பெறுவதற்கு மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நெய்வேலியில் உள்ள ஒன்றாவது சுரங்கத்தில் உற்பத்தி செய்யப் படும் மின்சாரம் 100 சதவிகிதம் இந்த மாநிலத்திற்கே வழங்கப் படுகிறது. இரண்டாவது சுரங்கத்தில் உற்பத்தி செய்யப்படு கின்ற மின்சாரத்தில் சுமார் 28 சதவிகிதம்தான் மத்திய அரசு வகுத்த இலக்கணப்படி தமிழ்நாட்டிற்கு கொடுக்கப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, மைய மின் நிலையங்களிலிருந்து 28 சதவிகிதம் மாநிலத்திற்கு வழங்கு வது என்பதை 50 சதவிகிதம் ஆக வழங்க வேண்டும் என்ற ஒரு